2023 ஏப்ரல் 17]

பணியோ அல்லது அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு நிதியோ, இதனை மிகச் சுலபமாக, மிக எளிமையாக online–*ல் செய்வதற்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன.*

தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே கூடுதல் Internet penetration, Smartphone penetration *வைத்திருக்கிறது. அனைத்து மக்களும்* online–*ல் செய்ய முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காகவேதான் யாருக்கெல்லாம் முடியவில்லையோ, அவர்களுக்கெல்லாம் வீடுகளுக்குச் சென்று செய்கிறோம்.* Pension–*க்கு,* Registration–*க்கு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி போன்று எல்லா நிதித் துறை செயல்களையும், ஒன்று,* online *அல்லது நேரடியாகச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். அதற்கும்மேல் எங்கெல்லாம் தேவையோ, உறுதியாகச் செய்து கொடுக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

பால் குளிரூட்டும் நிலையம்

***3106—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணையும், தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[*2023 ஏப்ரல் 17*

(அ) மற்றும் (ஆ) தற்போது வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணை அமைக்க வாய்ப்புகள் இல்லை. எனினும், புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திட, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வேதாரண்யம் பகுதி டெல்டா மாவட்டத்தில் இருந்தாலும்கூட, அது முற்றிலும் புஞ்சை நிலமாகவே இருக்கிறது; மானாவாரி, மழை பார்த்த பூமி. எனவே, அங்கேயிருக்கின்ற ஆண்கள், பெண்கள் என அனைவரும் வேலை காரணமாக வருமானம் ஈட்டுவதற்காகப் புலம்பெயர்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அங்கே பால் பண்ணை அமைப்பதும், சிறு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை அமைத்துத் தர வேண்டியதும் அவசியம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி, தஞ்சாவூரில், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பால் பண்ணை இயங்கி வருகிறது. எனினும், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி திருவாரூரில் புதிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பண்ணை அமைக்க சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதால், தற்போது வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணை அமைக்க வாய்ப்புகள் இல்லை. வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 11 பால்*

2023 ஏப்ரல் 17]

உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு, நாளொன்றுக்கு 800 லிட்டர் பால் உற்பத்தி செய்து, தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. வேதாரண்யம் பகுதியில் புதிய சங்கம் அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில், புதிய பால் பண்ணை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தலைஞாயிறு பேரூராட்சி அருகில் பிரதாமராமபுரம் என்ற இடத்தில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதாமராமபுரம் தொகுப்பு பால் குளிரூட்டும் மையம்–BMC அமைக்கப்பட்டு, அதன்மூலம் வேதாரண்யம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் சங்கங்களில் தினசரி கொள்முதல் செய்யப்படும் சுமார் 800 லிட்டர் பாலானது குளிரூட்டப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, தற்போது தலைஞாயிறு பகுதியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க தேவை எழவில்லை. அங்கு பால் கொள்முதல் மேலும் அதிகரிக்கும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில், தலைஞாயிறு பேரூராட்சியில் தொகுப்பு பால் குளிரூட்டும் மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, தற்போதைய நிலையில் தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன பிரச்சினை என்றால், பாக்கெட்டுகளில் வருகின்ற பாலைத்தான் டீக்கடையாக இருந்தாலும், ஓட்டல்களாக இருந்தாலும் பெரிதும் விரும்பி வாங்குகிறார்கள். வீட்டில் கறந்து கொண்டு வந்து கொடுக்கும் பாலை டீக்கடைகளிலோ அல்லது ஓட்டல்களிலோ வாங்குவது என்பது முற்றிலுமாகவே இல்லை என்றுகூட சொல்லலாம். தனியார் வீடுகளிலே மட்டும்தான் கறந்த பாலை வாங்குகிறார்கள். இப்படி ஒரு பிரச்சினை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, வாய்ப்பு இருக்கின்ற அனைத்து*

இடங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இருக்கின்ற 9,354 சங்கங்களை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் அதற்கான பெருமுயற்சி எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ஆங்காங்கு இருக்கின்ற ஒன்றியங்கள், நகரங்கள், அனைத்திலும் புது சங்கங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, மிக விரைவில் சங்கங்கள் உருவாக்கி, அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

169—

கிளை நூலகம்

***62251—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*